திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதி கல்லார் பழ ஆராய்ச்சி நிலையம் நல்ல தன்மை வாய்ந்தது. அது விரிவு படுத்தப்பட வேண்டுமென்று பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களே கூட கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். ஆராய்ச்சி செய்வதற்கேற்ற நல்ல வசதிகள், சூழ்நிலைகள் அங்கே இருக்கின்றன. எனவே, ஆராய்ச்சியில் அதிக ஆர்வம் காட்டுகின்ற நம்முடைய அமைச்சரவர்கள் அந்த பழ ஆராய்ச்சி நிலையத்தை விரிவுபடுத்த முயற்சி எடுத்துக் கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : தலைவரவர்களே, அந்தப் பழ ஆராய்ச்சி நிலையத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று பண்டித நேரு அவர்களே ஆர்வம் காட்டியிருப்பதாகச் சொன்னுர்கள். தமிழ் நாட்டி லுள்ளவர்களும் அதில் ஆர்வம் காட்டுவார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் நானும் கூட ஆர்வம் காட்டுகிறோம். கல்லார் பழ ஆராய்ச்சி நிலையத்திற்குப் பக்கத்திலே இருக்கின்ற நிலம் பாரஸ்ட் இலாக்காவைச் சேர்ந்தது. அவர்களைக் கேட்டதில் பழ ஆராய்ச்சிக்கு விரிவுபடுத்துவதை விட தேக்கு மரம், அல்லது மூங்கில் மரம் இவைகளை நட்டால் வருமானம் அதிகமாகும் என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் அதைப்பற்றி பேச்சுவார்த்தைகள் நடக்கின்றன.

ஐயாவையனுற்றின் கரையோரச் சாலை.

*678 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் தாலுக்காவில் ஐயாவையனுர் ஆற்றங்கரையில் எத்தனை மைல் நீளத்திற்கு கப்பிச்சாலை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

(இ) எந்த இடத்திலிருந்து எந்த இடம் முடிய ?

(உ) அதன் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் :

(அ) 7 கிலோ மீட்டர்.

(இ) காளி என்ற கிராமத்தையும், கொண்டல் கிராமத்தையும் இணைக்கிறது.

(உ) ரூ. 4·81 இலட்சம்

Price of sun-flower seeds.

*679 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposals to fix the price of the sun flower seeds ; and

(*b*) if so, the details of the same ?

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1974 மார்ச் 29]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : (அ) இல்லே.

(இ) வினவிற்கு இடமில்லே.

திரு. என். கே. பழனிசாமி : சார், சூரியகாந்தி விளேச்சல் போன வருஷத்தைவிட இந்த வருஷம் குறைவதற்கு என்ன காரணம்? விவசாயி களுக்கு ஆர்வம் குறைந்து விட்டதா ? சூரியகாந்தி வேளாண்மையில் நிலத்திலுள்ள சத்து பூராவையும் உறிஞ்சிடுவதால் நிலத்திற்கு அதிக உரம் போடவேண்டியிருக்கிறது என்ற முக்கியமான காரணத்திஞல், அதிகப் படியாக உற்பத்தி செய்ய சர்க்காரே ஒரு கட்டுப்படியாகக் கூடிய விலேயை நிர்ணயம் செய்து கொடுத்து, இதைப் பயிர் செய்கின்றவர்களுக்கு ஆர்வம் ஏற்படச் செய்ய தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 2, 3 கேள்விகளேக் கேட்டிருக்கிருர்கள். விலே நிர்ணயம் பற்றிச் சொன்னுர்கள். எண்ணெய், அல்லது எண்ணெய் வித்துக்களின் விலேயை நிர்ணயம் செய்வது நாம் அல்ல ; அது மத்திய அரசு தான். சூரியகாந்தி விதை அல்லது எண்ணெய்க்கு இப்போது விலே கட்டுப்பாடு இல்லே. பயிரிடு கின்றவர்களுக்கு ஆர்வம் குறைந்திருப்பதாகச் சொன்னுர்கள். அது சரி யல்ல.

சூரியகாந்தி பயிரிட்டு பழக்கப்பட்டவர்கள் இதை விரும்பி பயிர் செய் கிருர்கள். நல்ல பலனேயும் அடைகிருர்கள். வேர்க்கடலே பயிர் 120 115 நாட்களுக்குப் பிறகுதான் பலன்தரும். ஆனல் சூரியகாந்தி 90 நாளிலேயே பலன் தருகிறது. அடுத்து நிலத்திலுள்ள சத்துக்களே உறிஞ்சி விடுகிறது என்று சொன்னுர்கள். எல்லா பயிர்களுமே நிலத்திலுள்ள சத்தை உறிஞ்சத்தான் செய்யும். அதனுல்தான் நாம் நிலத்திற்கு உரம் போடுகிருேம். நெல், புல், அவரை, துவரை எதுவாக இருந்தாலும் சரி, பயிர் செய்யச் செய்ய சத்து குறையத் தான் செய்யும். அந்தந்த பயிர்களுக்குத் தகுந்த வகையில் தக்க உரங்களேப் போடுகிருேம்.

திரு. வ. சுப்பிரமணியம் : சார், சூரியகாந்தி எண்ணெயானது இதய நோய் உள்ளவர்களுக்கு அதிக பலனளிக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. இந்த எண்ணெய் இப்போது தமிழ்நாடு முழுவதும் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஏனென்றுல் சோப்புக்குப் பயன்படுத்தி விடுகிருர்கள். ஆகவே, அதிக அளவில் சூரியகாந்தி எண்ணெய் உற்பத்தி செய்ய அரசிடம் என்னென்ன திட்டங்கள் இருக்கின்றன. அரசுப் பண்ணே களிலேயே இதை உற்பத்தி செய்து, கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் எண்ணெய் விநியோகிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : சூரியகாந்தி எண்ணெயின் நல்ல தன்மையப் பற்றிச் சொன்னுர்கள். ரஷியா போன்ற நாடுகளில் அத ஞல்தான் அதிகமாகப் பயிர் செய்கிருர்கள். தமிழ் நாட்டிலும் அதிகமாக உற்பத்தியாகிறது. ரஷியாவில் கிடைக்கும் விளேச்சல் இங்கும் கிடைக்கிறது. சூரியகாந்தி எண்ணெய் கிடைக்கவில்லே என்று சொன்னுர்கள். கோவை

மாவட்டத்தில் கோவை, ஈரோடு ஆகிய இரண்டு இடங்களில் சிறப்பங்காடிகளில் இந்த எண்ணெய் விற்பனை செய்யப்படுகிறது. மற்ற இடங்களிலும் கிடைக்கிறது. இந்த எண்ணெயை இரண்டு விதமாக விற்கிருர்கள். தனி எண்ணெயாகவும் விற்பனை செய்கிருர்கள். நல்லெண்ணெயோடு—ஜிஞ்சலி ஆயில்—கலந்தும் விற்பனை செய்கிருர்கள், நல்லெண்ணெயை விட சூரியகாந்தி எண்ணெய் நல்லது. இருந்தாலும் கலப்படம் செய்வதற்குக் காரணம் இதன் பலனை மக்கள் இன்னும் பூரணமாக உணர்ந்து கொள்ளவில்லை. அதன் தன்மையை மக்களுக்கு எடுத்து விளக்கினல் மக்கள் அதிக அளவில் பயன்படுத்தும் வாய்ப்பு ஏற்படும்.

ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு ஓய்வு ஊதியம்.

*680 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், குளித்தலை ஊராட்சி ஒன்றியத்தில், ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களாகப் பணியாற்றி விட்டு, 1969 ஜூன் முதல் 1972 மே மாதம் வரை ஓய்வுபெற்ற பல ஆசிரியர்களுக்கு, 1973 நவம்பர் வரை ஓய்வு ஊதியமும், சேமநல வைப்பு நிதியும் வழங்கப்படாமல் உள்ளதா ?

(இ) ஆம் எனில், காலதாமதம் ஆவதற்கு காரணம் யாது ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இந்த இடை நிலைக் காலத்தில் ஓய்வு பெற்ற ஒன்பது ஆசிரியர்களுக்கும் சேம நல வைப்பு நிதி வழங்கப்பட்டு விட்டது. அவர்களுள் எண்மருக்கு ஓய்வு ஊதியமும் வழங்கப்பட்டுவிட்டது.

(இ) ஓய்வு ஊதியம் இன்னும் கொடுக்கப்படாமல் விடுபட்ட ஒரு ஆசிரியர் ஓய்வு பெறுவதற்கு முன்பே சில விபரங்களைக் கொடுக்கும்படி அறிவுறுத்தியிருந்தும் அவர் இன்னமும் அளிக்கவில்லை. அவர் அவ் விபரங்களை அளித்தவுடன் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அந்தக் குறிப்பிட்ட ஆசிரியர் பல முறை ஓய்வூதிய மனு கொடுத்தும் திருப்பி அனுப்பிக் கொண்டிருக்கிருர்கள். ஆகவே, இனிமேல் மனு கொடுத்தால் ஏற்றுக்கொண்டு உடனடியாக ஓய்வூதியத்தை வழங்க அரசாங்கம் வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அந்தக் குறிப்பிட்ட சூசை மேரி உடையார் என்ற ஆசிரியர்—ஓய்வு பெற்றுச் சென்றதற்குப் பிறகு எங்கே தங்கியிருக்கிருர்கள் என்ற முகவரி கொடுக்கப்படாததாலும் பல வேறு நினைவூட்டுக் கடிதங்கள் எழுதியும் பதில் வராததாலும் அவரிடம் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதில் அனுப்பாததால் தாமதம் ஏற்பட்டு விட்டது. இப்போது அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது விரைவில் அளிக்கப்படும்.